JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 100/2015 Date:16.02.2026 P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திருமதி. மனோரஞ்சிதம் |
| தந்தை பெயர் க/பெ | திரு. சுப்பையா |
| முகவரி | நெ. 5, பாரதி நகர், மிட்டணாம்மல்லி சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 16th day of February 2026.

எதிரி ஆஜரில் உள்ளார்.
**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான் அது **அ.த.சா.ஆ.1** ஆகும். கடந்த 16.07.2013 அன்று வீட்டில் நான் வேலை செய்துக்கொண்டிருந்த போது அப்போது என் வீட்டில் வேலை செய்த வடநாட்டை சேர்ந்த நபர் நான் அணிந்திருந்த தாலி சரடை பின்புறமாக வந்த அந்த நபர் என் கழுத்தை கயிறு போட்டு இறுக்கி நான் அணிந்திருந்த தாலி சரடை பறித்து சென்றார். நான் மயக்கமாகி விழுந்து விட்டேன். நான் மயக்கம் தெளிந்து பக்கத்து வீட்டில் இருந்த ஷோபா என்பவரிடம் நடந்த விவரங்களை கூறினேன். என்னை மருத்துவமனை அழைத்து சென்று சிகிச்சை அளித்த பின்பு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அதன் பின்பு 6 மாதம் கழித்து என்னுடைய நகை கிடைத்ததாக போலீசார் கூறினார்கள். நான் எனது நகையை அடையாளம் காட்டினேன். அதன் பின்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இடைக்கால பொருப்பில் பெற்று சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.2** ஆகும். எனது நகை கிடைத்துவிட்டதால் இவ்வழக்கை பொருத்து மேல்நடவடிக்கையை கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur